# கிருபையுள்ள வார்த்தை®

**GRACIOUS WORD Luke 4:22**

Vol - 14 June 2013 ஜூன் ஆண்டு சந்தா ரூ. 100/-




கௌரவ ஆசிரியர் : Betty Choate ஆசிரியர் : PCPR

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை... | 3 |
| மனந்திரும்புங்கள் ... | 7 |
| சாத்தானை மேற்கொள்வது.. | 10 |
| கிறிஸ்து மரித்து... | 14 |
| அன்றுபோல் இன்றும்... | 21 |
| தேவனுடைய சிங்காசனத்தின். | 24 |
| பிரசங்க குறிப்புகள் | 26 |


*In memory of*

**J.C. CHOATE**


ஆசிரியர் குழு

*Guest Editors :* **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

**Editor : PCPR**

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**C. அருண்சிங்** B.E.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**
**சுவிசேஷத்தின்**
**வல்லமையை கூறும்**
**வல்லவரின் வார்த்தை**

## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

பாருங்கள்!



பயன் அடையுங்கள்

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை - 6.45**
**வெள்ளி காலை - 6.00**


### Holy Cross T.V.
(புதுச்சேரி)


ஞாயிறு காலை - 6.30

### King of Glory T.V.
(திருநெல்வேலி)

ஞாயிறு காலை - 6.00

செய்தியாளர் :
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)




விஷேச ஆங்கில THE VOICE OF TRUTH INTERNATIONAL இதழ் கிடைக்கும் தபால் செலவு மட்டும் அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்!

# இரட்சிக்கப்படாதவர்களைக் குறித்து நாம் உண்மையாகவே அக்கரைப்படுகிறோமா?



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

பிரியமானவர்களே! உங்கள் யாவரையும் மனுக்குலத்தை மீட்க தன் இன்னுயிரை ஈந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி, இவ்விதழ் மூலம் சந்திப்பதிலே கர்த்தருக்குள் களிகூறுகிறேன்.

அன்பானவர்களே! ஆண்டவர் இயேசு தாம் பூமிக்கு வந்ததற்கான நோக்கங்களை வெளிப்படுத்தும் போது, இவ்வாறாக சொன்னார்: லூக்கா 19:10, இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். ஏனேனில் ஆண்டவர் மனிதனாக பிறந்தது, வாழ்ந்தது, மரித்தது, உயிர்த்தது எல்லாம் மனுக்குலத்தை மீட்க தான்.அவர் மீட்கப்படாதவர் களுக்காகப் பாடுபடவும், மரிக்கவும் அந்தப் பரலோக மகிமையை விட்டார். (லூக்கா 24:46)

தேவ ஆட்டுக்குட்டியானவர் இவ்வுலகின் பாவங்களை எடுத்துப்போட விரும்புகிறார். யோவான் 1:29ல் 'மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்றான். மேலும், மனித இனத்தை தேவனோடு ஒப்புரவாக்க விரும்புகிறார். உண்மையாகவே கிறிஸ்து, இரட்சிப்பின் வேலையை தம்மை பின்பற்றுகிறவர்களிடம் விட்டுச் சென்றார்.

ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தை விட்டுப் போவதற்கு முன்பு அவருக்கு உண்டான கவலை, உலகத்தின் முடிவு பரியந்தம் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. மாற்கு 16:15, 'பின்பு அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார். முதல் நூற்றாண்டு பரிசுத்தவான்கள் எஜமானுடைய கரிசனையை உணர்ந்து, பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் வெற்றிகொள்ளும் சுவிசேஷத்தை தனிப்பட்ட முறையிலும், பொதுவான முறையிலும் அனுதினமும் பிரசங்கித்தார்கள். அப் 8:4, 'சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்'. மேலும், அப் 5:42 யும் வாசியுங்கள்.

தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை பாவத்தால் சபிக்கப்பட்டு,

இருளில் தடுமாறிக்கொண்டிருக்கும் மக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பு நிச்சயமாகவே நமக்கு இருக்கிறது. (அப் 20:24) உலகில் நம்பிக்கை இல்லாமல் இழந்து போயிருக்கிற கோடான கோடி மக்களுக்குச் சமாதானத்தை பிரசங்கிக்க வேண்டும். உண்மையாகவே மற்றவர்களுக்காக அக்கறைப்படுகிறோமா? ( சங் 42:4 ). நம் அயலகத்தார் நம்மை பற்றி இப்படித்தான் கூறுவார்களா? சங் 142:4, வலதுபுறமாய்க் கண்ணோக்கிப்பாரும், என்னை அறிவார் ஒருவரும்இல்லை, எனக்கு அடைக்கலமில்லாமற் போயிற்று, **“என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை’’**. அப்படி கூறினால், அது எவ்வளவு பரிதாபத்திற்குரியதாக இருக்கும்.

நாம், இழந்து போன ஆத்துமாக்கள் மீது ஆண்டவர் இயேசுவைப் போல அக்கரையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே, நமக்குள்ளே வாசம் செய்கிற பரிசுத்த ஆவியானவரின் வாஞ்சையாகவும், தேவனுடைய சித்தமாகவும், கிறிஸ்துவின் ஏக்கமாகவும் இருக்கிறது என்பதனை நாம் நன்கு புரிந்துக்கொள்ள வேண்டும். இழந்துப் போன ஆத்துமாக்களை குறித்து நாம் அக்கறைப்பட்டால் கீழ்க்காணும் காரியங்களை நாம் செய்வோம்.

**1. அருகிலிருப்பவர்களுக்கும், தூரத்திலிருப்பவர்களுக்கும் போதிக்கும்படி வேதாகமத்தை கற்றுக்கொள்வோம்.** 1பேதுரு 3:15, ‘‘கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள். உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும், சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்”.

**2. இயேசுவுக்காகப் பேசும் ஒவ்வொரு வாய்ப்பையும் பிடித்துக்கொள்வோம்.** சங் 107:22, ‘‘தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக”

**3. சத்தியம் பிரகாசிக்கும்படி தவறை வெளிப்படுத்துவோம்.** எபே 5:11, “கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்”.

நம்மை வருத்திக்கொண்டு, சில சொகுசுகளை தவிர்த்து விட்டு, ஊழியத்தை தாங்குவோம்.



**4. கள்ளப்போதகர்களை ஒரு போதும் உற்சாகப்படுத்த மாட்டோம்.** 2யோவான் 10-11, ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்".

**5. எல்லா நேரங்களிலும் சத்தியத்தை தெளிவாகப் பேசுவோம்.** யோவான் 3:32, தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்: அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை".

**6. நாம் மற்றவர்களோடு அறிவு பூர்வமாக பேசும்படி மார்க்க பிரிவினை உபதேசங்களையும், சபை வரலாற்றையும் கற்றுக்கொள்வோம்.** கொலே 2:8-10, ''லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள்".

**7. கிறிஸ்துவை போலிருந்து, தவறு செய்பவர்கள் நம்மையும், சுவிசேஷத்தையும் கேலி செய்தாலும் கூட நாம் சுயக்கட்டுப்பாட்டை இழந்துவிட மாட்டோம்.** அப் 26:25, "அதற்கு அவன் கனம் பொருந்திய பெஸ்துவே நான் பயித்யக்காரனல்ல. சத்தியமும் சொஸ்தபுத்தியமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்".

**8. நம் பிரசங்கத்தை அநேகர் கேட்காமல் செவிகொடுக்காமல் இருந்தாலும் நாம் அதில் உறுதியாக இருப்போம்.** கலா 6:9, ''நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்".

**9. ராஜ்ஜியத்தின் விதை வசனம் என்பதையும் விளையச் செய்கிறவர் தேவன் என்பதையும் நினைவில் கொள்வோம்.** லூக் 8:11, ''அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்". மேலும், 1 கொரி 3:6, "நான் நட்டேன்; அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்; தேவனே விளையச் செய்தார்".

**10. பதில்களை வலியுறுத்தாமல் எப்போதும் கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள்ளே இருக்கிறார் என்பதை வலியுறுத்துவோம்.** கொலோ 1:27, “புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐஸ்சுவரியம் இன்னதென்று தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்”.

**11. நம்மை சுற்றிலும் இருப்பவர்களுக்கு இரட்சிப்பின் செய்தியை அறிவிப்பதற்கு நாம் கடனாளி என்று எப்போதும் உணருவோம்.** ரோமர் 1:14-16, ‘‘கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும் ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியில் இருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது”.

**12. இந்த பூமியானது தண்ணீரால் நிறைந்திருக்கிறது போல நாமும் சத்தியத்தால் உலகை நிரப்ப உதாரத்துவமாய் ஊழியத்திற்கு கொடுப்போம்.** லூக்கா 8:1, “பின்பு அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள்.

இறுதியாக பிரியமானவர்களே! நாம் எல்லாவற்றையும் அநுபவித்துவிட்டு மீதியை கொடுக்கலாம் என்றால், உங்களுக்கு எதுவும் மீந்தாது. எல்லாம் பத்தாததாக இருக்கும். ஆகையால் நம்மை வருத்திக்கொண்டு சில சொகுசுகளை தவிர்த்து விட்டு ஊழியத்தை தாங்குவோம்.

அன்புடன்

**உங்கள் சகோதரன்**, **PCPR**



உண்மையான மனந்திரும்புதல் என்பது இருதயத்தை மாற்றிக்கொள்வதை உள்ளடக்கும்; அதாவது முழுமையான திரும்புதல் ஆகும்.

# 9 மனந்திரும்புங்கள் அல்லது அழிவீர்கள்

## Repent or Perish



J.C. Choate

நம்முடைய படிப்பிற்கு ஆதாரமாக, தயவுசெய்து, கிறிஸ்துவே கூறிய பின்வரும் வாக்கியத்தைக் கவனியுங்கள்: "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் " ( லூக் 13:3). இந்த சத்தியத்தை முக்கியத்துவப் படுத்தும் வகையில் ஆண்டவர், இதேப் போன்ற ஒரு வாக்கியத்தை 5ம் வசனத்திலும் பயன்படுத்துகிறார். இவைகளில் தொடர்புடையதாக, பாவிகள் தங்கள் தேவனுக்கு விரோதமான செயல்களுக்கு செலுத்தி தீர்க்கும்படி இரண்டே வாய்ப்புகள் உண்டு. அவர்கள் ஒரு நாளில் தங்கள் செய்கைகளின் பலனை அடையாமற் போகவேண்டுமெனில், இப்பொழுதே தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும். ஆதலால் தான், ஆண்டவர் எளிமையாக கூறுகிறார்: நீங்கள் ஒன்று மனந்திரும்புங்கள் அல்லது அழிந்து போவீர்கள் என்று அவர்களுக்கு ஒரு தேர்வு செய்யும்படியான வாய்ப்பு கொடுக்கப்படுகிறது; இது அவர்களுக்கு (இயேசுவின் காலத்தவர்) மட்டும் கொடுக்கப்படாமல், அதே எச்சரிக்கை மற்றும் தேர்வு செய்யும் வாய்ப்பு நமக்கும் கொடுக்கப்படுகிறது.

பவுல் பிற்காலத்தில் கூறும்போது, தேவன் இப்பொழுது எங்குமுள்ள மனுஷர் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என விரும்புவதாக கூறுகிறார். அவர் குறிப்பாக கூறுகையில், ''அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" ( அப் 17: 30). ஒரு காலத்தில் தேவன் சிலவற்றை காணாதவர் போல் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது நிலைமை வேறு என பவுல் உறுதியாகக் கூறுகிறார். ஏவப்பட்ட அப்போஸ்தலன் கூறும்போது, இன்று தேவன், எங்குமுள்ள மனுஷரெல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென விரும்புவதாகக் கூறுகிறார்; ஒன்று உங்களுக்கு தெரியுமா? அதில் நீங்களும், நானும் மற்ற எல்லாரும் அடங்குவோம். அதைப்பற்றி என்ன? ஏன், தேவன் நம்மை மனந்திரும்பும்படி கட்டளையிடுகிறார். நாம் அப்படி செய்யாவிடில் என்ன? நாம் இவற்றிற்கு வெறுமனே பதில் கூறியே தீர வேண்டும். ஒன்றை நினைவில் வையுங்கள்: தேவன் நம்மிடம் மனந்திரும்பும்படி கட்டளையிட்டுள்ளார்; மேலும் நாம்

அதை செய்ய தவறினால், அதற்கு அவர் பொறுப்பல்ல.

ஒருவர் கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கு கீழ்படியும்படி தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் என்று வசனம் கூறுகிறது. மேலும் பேதுரு முதல் சுவிஷேச பிரசங்கத்தை பேசினபோது, ஒரு கூட்ட மக்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று அறிந்துகொள்ள விரும்பினது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அதற்கு பேதுருவின் பதில், “பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் '' (அப் 2:38) அப்படியானால், இதில் சந்தேகம் ஒன்றுமே இல்லை; ஒருவர் பாவங்களில் இருந்து மன்னிப்பு பெற வேண்டுமெனில் மனந்திரும்ப வேண்டியது அவசியம். மனந்திரும்புவதை தவிர்த்துவிட்டு, ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது.

தேவன் தம்
பிள்ளைகளை
திராணிக்கு மீறி
சோதிக்கப்பட விடமாட்டார்.



மனந்திரும்புதல் என்றால் என்ன? அது, நடந்தவற்றிற்காக வெறுமனே வருத்தப்படுவது மட்டும் இல்லை என நமக்குத் தெரியும். மேலும் ஒருவருடைய பழைய பாவங்களை அறிக்கை செய்வது, போன்றவற்றைவிட அது அதிகமானது. உண்மையான மனந்திரும்புதல் என்பது இருதயத்தை மாற்றிக்கொள்வதை உள்ளடக்கும்; அதாவது முழுமையான திரும்புதல் ஆகும். மற்றொரு வார்த்தையில் கூறினால், ஒருவர் பாவ வழியில் சென்று கொண்டிருப்பாரேயானால், அவர் உடனடியாக திரும்பி, அதற்கு நேர் எதிரான வழியில் செல்ல ஆரம்பிப்பதாகும். இன்னும் இதை விளக்க வேண்டுமெனில்: ஒருவர் இதுவரை தன்னுடைய பக்கத்து வீட்டுக்காரரிடம் சண்டை போட்டு வெறுத்துக் கொண்டிருப்பாரேயானால், இனி அவரை நேசிக்க ஆரம்பிப்பார்; ஒருவர் இதுவரை திருடிக் கொண்டிருப்பாரேயானால், இனி தானாக (நல்ல) வேலை செய்து, ஏழைகளுக்கும் உதவி செய்து கொடுப்பார். ஒருவர் இதுவரை மற்றவர்களை சபித்துக் கொண்டிருப்பவரானால், இனி எல்லாரிடமும் அன்பாயிருந்து, தேவனையும் புகழும்படி செய்வது போன்றவைகளே!

ஆம், மனந்திரும்புதல் என்பது வாழ்வின் முழுமையான மாற்றம், நிலைமாறுதல், வெளித்தோற்றம், உணர்வு, மனோநிலை மற்றும் பல

மனந்திரும்புதல் என்பது, ஒரு புதிய வாழ்வை தொடங்குவதற்காக பழைய வாழ்வை விட்டுவிடுவதாகும் : அதினால் பிசாசின் ஊழியராய் இனி இராமல், தேவனுடைய ஊழியராக இருக்கப் போகிறோம். அதுதான் உண்மையான மனந்திரும்புதல்.

கொரிந்தியர்களுக்கு பவுல் விளக்குகையில் : "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது ; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" ( 2 கொரி 7:10 ) மனந்திரும்புதல் என்பது இரட்சிப்பிற்கான ஒரு நிபந்தனை ; இதனால், மனந்திரும்புதலினால் 'மட்டுமே' ஒருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று அர்த்தமல்ல மனந்திரும்புதல் இரட்சிப்பிற்கான படிகளில் ஒன்று, அதாவது இரட்சிப்பிற்கான பாதையில் வழிநடத்தி செல்வதாகும். மனந்திரும்புதல், அதாவது வேதாகம மனந்திரும்புதல், நேர்மையான விசுவாசத்தை பின் தொடர வேண்டும் மற்றும் இந்த மனந்திரும்புதலை பின் தொடர்ந்து இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதலும், அதனை தொடர்ந்து இறுதியாக பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்கும் பெறுதலும் தொடர வேண்டும் ( மாற்கு 16:16 ; ரோ 10:10 ; அப் 2:38 ; 22:16 ) ஆகையினால் இரட்சிப்பிற்காக ஒன்று மட்டுமல்ல, நிறைய நிபந்தனைகள் உள்ளன ; மேலும் அதில் ஒவ்வொன்றுமே சமமான முக்கியத்துவம் வாய்ந்தது என்ற எண்ணத்துடன் அவற்றை செய்ய வேண்டும்.

ஆண்டவர் ஒவ்வொரு ஆத்துமாவின் இரட்சிப்பிலும் ஆர்வமுடையவராயிருக்கிறார் என்று, ''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் செட்டுப்போகாமல் (2பேதுரு 3:9). ஒவ்வொரு ஆத்துமாவும் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் என்று பேராவல் உடையவராயிருக்கிறார். நாம் இப்படி ஒரு செயலை செய்ய வேண்டும் என அவர் ஏன் விரும்புகிறார்? ஏனெனில் நம்முடைய ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ள அது மிகவும் அவசியமானதாகும். பாவமோ பாவம் செய்தவர்களோ பரலோக வாசலை கடக்க முடியாது. ஆதலால் நாம் பரலோகம் செல்ல வேண்டுமெனில் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுக்கு முன் பரிசுத்தமான வாழ்வு வாழ வேண்டும். மறந்துவிடாதீர்கள் : தேவன் இப்படித்தான வைத்துள்ளார் மனந்திரும்புங்கள் அல்லது அழிந்துபோங்கள். நண்பரே இரட்சிக்கப்படும்படியாக உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவின் சுவிசேசத்தற்கு கீழ்படியுங்கள் இன்றே அதை செய்யுங்கள்.

# 4 சாத்தானை மேற்கொள்வது எப்படி?



- சகோ. P.R. சாமி (பெங்களூர்)

சாத்தானுடைய குணாதிசயங்களைப் பற்றி படித்தோம். அதைத் தொடர்ந்து இப்பேர்ப்பட்ட தந்திரசாலி ஏமாற்றுவித்தைக்காரனை எப்படி நாம் ஜெயங்கொள்வது என்று பார்க்கலாம்.


பிசாசானவன் தேவனுடைய பிள்ளையை சோதிக்கிறான் என்றாலும், மனிதன் செய்கிற பாவத்திற்கு தேவன் மனிதனை பொறுப்பாளியாக்குகிறாரே தவிர சாத்தானை அல்ல. பெரும்பாலும் மனிதர்கள் என்ன கூறுகின்றனர் என்றால், "தேவன் என்னை மிகவும் சோதிக்கிறார் என்பதே'' தீமை செய்யும்படி தேவன் ஒருபோதும் நம்மை சோதிக்கமாட்டார்.

"சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும். (யாக் 1:13-15).

சிலர், அப்படிப்பட்ட சாத்தானை, ஏன் தேவன் மனிதனை சோதிக்க அனுமதிக்க வேண்டும்? சாத்தான் தேவனைக்காட்டிலும் பலசாலியா'? என்று கேட்கின்றனர். மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபோது தேவனுடைய சாயலிலே சிருஷ்டிக்கப்பட்டான். எதையும் சுயமாக தேர்ந்தெடுத்து செயலாற்றும் சுதந்தரத்தை தேவன் மனிதனுக்கு கொடுத்திருக்கிறார். மனிதன் வேண்டுமானால் தேவனுக்கு கீழ்படியலாம் அல்லது சாத்தானுக்கு கீழ்படியலாம். தேவன் கட்டாயப்படுத்துவதில்லை. ஆகவே ''மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்படிதலுக்கானாலும் எதற்கு கீழ்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" ரோமா 6:16).

சாத்தான் ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட முதல் ஸ்திரியாகிய ஏவாளை சோதித்து, தனக்கு கீழ்படியும்படியாகவும் தேவனுக்கு கீழ்படியாமல் போகவும் செய்தான். அந்த ஸ்திரீயானவள் அவள் செய்த பாவத்தின் பிரதிபலனை அனுபவித்தாள். அந்தப்படியே சாத்தான் நம்முடைய யோபுவையும் சோதித்தான். ஆனால் யோபு தன் விசுவாசத்தை விட்டு விலகவில்லை. சாத்தான் தோற்றுப்போனான். "இவை

எல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யுவுமில்லை, தேவனைப்பற்றிக் குறை சொல்லவுமில்லை" (யோபு 1 :22). சாத்தான் இயேசு கிறிஸ்துவையும் சோதித்தான் (லூக் 4:1-13). "அவர் நம்மைப்போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டார்" (எபி 4:15). ஆனால் இயேசு தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தினாலே சாத்தானை மடங்கடித்தார் (எபே6:17). சாத்தான் யூதாசையும் சோதித்தான் (யோவான் 13:2). அவனோ தன் இரட்சகரையே 30 வெள்ளிக்காசுக்காக விற்றுப்போட்டான். இவர்களை எப்படி சாத்தான் சோதித்தானோ, அப்படியே தேவனுடைய பிள்ளைகளையும் இன்று சோதிக்கிறான் (யாக்1:2,3). ஆனால் ''சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தை பெறுவான் (யாக் 1:12).



கண்களின் இச்சை,
மாம்சத்தின் இச்சை,
ஜீவனத்தின் பெருமையுமாகிய
இந்த மூன்று உபகரணத்தால்
சாத்தான் சோதிக்க முற்படுவான்

கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமையுமாகிய இந்த மூன்று உபகரணத்தால் சாத்தான் சோதிக்க முற்படுவான் (1யோவான் 2:16). யோபுவைப்போல, இயேசுவைப்போல சோதனைகளுக்கு நம்மை ஒப்புக்கொடாமல் அதை சகித்தால், இவை எல்லாம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தேவன் தம் பிள்ளைகளை திராணிக்கு மீறி சோதிக்கப்பட விடமாட்டார். அப்படி சோதிக்கப்பட்டாலும் சோதனையை தாங்கத்தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1கொரி 10:13). சாத்தானின் வல்லமையை அழிக்கவே கிறிஸ்து வந்தார் (எபி 2:4,15; ரோமா 16:20).

பிசாசானவன் கட்டப்பட்டிருக்கிறான். அவன் வல்லமை வரையறுக்கப் பட்டிருக்கிறது. "ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து அந்த 1000 வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம்

போக்காதபடிக்கு அதை பாதாளத்திலே தள்ளியடைத்து அதின்மேல் முத்திரை போட்டான் (வெளி20:1-3).

இயேசு, ''பலவானை முந்திக்கட்டினாலொழிய ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவன் உடைமைகளை கொள்ளையிடக்கூடாது. கட்டினானேயாகில் அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்" என்றார் (மாற்கு 3:27). இதிலிருந்து சாத்தான் கட்டப்பட்டிருக்கிறான் என்பதை எவ்வாறு மறுக்கமுடியும்? பைத்தியம்பிடித்த நாயை கட்டிப்போட்டு விட்டதால், அது ஒன்றும் செய்யாது என்று அர்த்தமல்ல.

கிறிஸ்துவும் மனிதன் வெற்றிகரமாக சாத்தானை எதிர்க்கும்படி செய்தார். ''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" என்று யாக்கோபு கூறுகிறார்.

''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான்" (1 பேது 5:8). சிலர் பேதுரு கூறியதிலிருந்து சாத்தான் இன்னும் கட்டப்படவில்லை என்பர். அடுத்த வசனத்தைப் படியுங்கள். இங்கு பேதுரு எவ்வாறு சாத்தானை எதிர்த்து நிற்பது என்பதை சொல்கிறார். ''விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே". விசுவாசத்தில் உறுதியாய் இருப்பவர்கள் சாத்தானை எதிர்த்து நிற்க முடியும். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கததையும் தரித்துக்கொள்ளுங்கள்" என்றார் பவுல் (எபே 6:11).

மேலும் "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய் எல்லாவற்றுக்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்'' என்றார் (எபே 6:16). ஆகவே தங்கள் ஆத்தும ரட்சிப்புக்கு உண்மையிலே அவனை எதிர்த்து நிற்கும் எல்லோராலும் சாத்தான் கட்டப்பட்டிருக்கிறான். அவனை கட்டும் சங்கிலியாக இருப்பது கிறிஸ்துவின் சுவிசேஷம். புறஜாதிகளுக்கு மத்தியில், தான் ஊழியம் செய்வதற்காக தெரிந்துகொள்ளப்பட்ட போது கிறிஸ்து கூறியதாக பவுல் குறிப்பட்டது, "அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ

அவர்களுடைய கண்களை திறக்கும்பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்" (அப் 26:118). பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதினால் இவை எல்லாவற்றையும் அவர்களுக்கு சாத்தியமாக்கினார்.

முடிவாக பிசாசானவன், மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" (வெளி 20:10) சரியான இடம் தான் இந்த பிசாசானவனுக்கு. எல்லோரையும் மோசடி செய்த ஏமாற்றுக்காரனுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்கிறீர்களா? பொறுங்கள். இதைக்காட்டிலும் மிகவும் பயங்கரமான தண்டனை காத்திருப்பதை நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டும். மறந்துவிடக்கூடாது. அதாவது சாத்தானால் வஞ்சிக்கப்பட்டவர்கள் அனைவரும், அவனுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் அனைவரும், சத்தியத்தை அறியாதவர்களும், அதற்குக் கீழ்படியாதவர்களும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படியாமல் இருக்கும் ஒவ்வொருவரும் இவ்வுலகில் உள்ள எல்லா கொடியவர்களும் பிசாசுக்காவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே பங்கடைவார்கள் (மத்25:41). ''இவர்கள் நித்திய அக்கினியை அடையவும் நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்'' என்றார் (மத்25:46).

– (தொடரும்)

## சிந்தியுங்கள்...

1. ஜாதிகள் இருக்கின்றன என்பதைவிடக் கொடுமையான விஷயம், அவைகள் அமைப்பு ரீதியாக கட்டமைக்கப்பட்டும், அந்த அமைப்புகள் அரசியல் லாபங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன என்பது தான். பிலி 2:4, ''அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக".
2. வெறுப்பு அரசியல் தலை தூக்குமானால், அது தமிழர்களே தமிழர்களை தாக்கும் கொடுமையாக முடியும். கலா 5:15, "நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

# 8 கிறிஸ்து மரித்து மறுபடியும் உயிரோடு எழுந்தாரா?

## Did Jesus Die and Rise Again?

தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பது என்பது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உள்ளடக்கிய அற்புதங்களின் சாத்தியக்கூறுகளை விசுவாசிப்பதாகும். தேவன் இருப்பது உண்மையானால், அவர் அண்ட சராசரங்களையும் சிருஷ்டித்தது உண்மையானால், அண்டசராசரங்களும் இயற்கை விதிகளால் கட்டுப்படுத்தப்படுவது உண்மையானால், ஜீவன்களை அவர் சிருஷ்டித்தது உண்மையானால், அவர் மரித்தோரை எழுப்புவதும் தர்க்கரீதியான உண்மை. மரித்த ஒரு மனிதனை உயிரோடு மீட்பது அண்டசராசரங்களின் சிருஷ்டிப்புக்கு ஒப்பிட எதுவுமில்லை. ஒரு உயிரை சிருஷ்டிப்பதைக் காட்டிலும், ஒருவருக்கு உயிர் கொடுப்பது கடினமான செயலல்ல என்பதை முதலாவது உணர வேண்டும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய முழுமையான வல்லமையின் மகத்துவம், ஜீவனின் மேலும் மரணத்தின் மேலும் இருப்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்து விளக்கமளிக்க எண்ணிக்கையற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறை நம்பிக்கையற்றவர்கள் இந்த பாடத்தை மனம் திறக்கப்படாத நிலையில் அணுகினார்கள்; அற்புதங்கள் நடக்க சாத்தியக் கூறுகள் கிடையாது என்று முன்கூட்டியே தீர்மானித்தார்கள்; தங்களின் முரண்பாடான கருத்துக்களினிமித்தம், கொடுக்கப்பட்ட சாட்சியங்களையும் புறக்கணித்தனர். சிலர், இயேசுவின் சீஷர்கள் அவருடைய சரீரத்தைத் திருடி, பிறகு அவர் உயிரோடிருப்பதைப் போல கிடத்தி வைத்தனர் என்கிறார்கள். சிலர், இயேசு மயக்க முற்றிருந்த நிலையில் இருக்கும் போது அடக்கம் பண்ணப்பட்டார், கல்லறையின் குளுமையால் மறுபடியும் அவர் உயிர்ப்பிக்கப்பட்டார், என்று நம்புகின்றனர். வேறு சிலர், அப்போஸ்தலர்கள் அப்படியொரு முறையில் பார்த்தார்கள் – அவர்கள் பிரம்மையில் இருந்தார்கள் என்கின்றனர். இன்னும் சிலர், இயேசு சிலுவைக்குத் தப்பி இந்தியாவுக்குப் போனார், எனவே அவரைப் போன்ற சாயலில் இருந்த ஒருவரையே சிலுவையில் அறைந்து கொன்றார்கள் என்கின்றனர்.

இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததை விசுவாசியாதவர்கள் திருமறை பதிவுகளை மட்டப்படுத்த எந்தவித அளவுக்கும் போவார்கள். ஆகிலும் உண்மையாக சத்தியத்தைத் தேடுவோரை சாட்சியங்கள் எங்கே நடத்துகிறது?

### இயேசுவின் மரணத்துக்கான சாட்சியம்

இயேசு சிலுவையில் மரித்தார் என விசுவாசிப்பதற்கான நான்கு காரணங்கள். **முதலாவதாக**, புதிய ஏற்பாட்டின்படி, இயேசு தாமே சிலுவையில் அறையப்பட்டு மரிப்பார் என இயேசுவே முன்னுரைத்தார். பிலிப்புச் செசரியாவில், தமது அப்போஸ்தலர்களிடத்தில், ‘‘மேலும் மனுஷகுமாரன் பலபாடுகள் படவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார்” (லூக்கா 9:22).



சவுல் கர்த்தரை சந்தித்தபோதோ, உபவாசித்தபோதோ, ஜெபித்தபோதோ இரட்சிக்கப்படவில்லை; மாறாக, ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது.

பிறகு, இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் சற்று அப்புறமாய் அழைத்துக் கொண்டு போய், ‘‘இதோ எருசலேமுக்குப் போகிறோம்; அங்கே மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள். அவர்கள் அவரை பரியாசம் பண்ணி, வாரினால் அடித்து, அவர்மேல் துப்பி, அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்’’ (மாற்கு 10:33,34)

**இரண்டாவதாக**, புதிய ஏற்பாடு இயேசவின் சிலுவை மரணம் குறித்து விரிவான விளக்கமளிக்கிறது. லூக்கா, “கபால ஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்த பொழுது, அங்கே அவரையும், அவருடைய வலது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள்’’ (லூக்கா 23:33). அன்று பின்பகல் மூன்று மணிக்கு, “இயேசு மிகுந்த சத்தமிட்டு கூப்பிட்டு, ‘பிதாவே, உம்முடைய கைகளில் என்

ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று சொல்லி தமது ஜீவனை விட்டார்'' (லூக்கா 23:46) (மத் 27:35-50யும் காண்க).

**மூன்றாவதாக**, இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கும் மரித்ததற்கும் சாட்சிகள் இருந்தன. ''நூற்றுக்கு அதிபதியும், அவனோடே கூட காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து 'மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்' என்றார்கள். மேலும், இயேசுவுக்கு ஊழியஞ் செய்யும்படி வந்திருந்த அநேகஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், செபதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்'' ( மத்தேயு 27:54-56 ). இயேசுவின் தாயும் அங்கே இருந்தார். "அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன்மகன் என்றார், பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ உன் தாய் என்றார்" (யோவான் 19:26,27).

**நான்காவதாக**, வரலாற்று குறிப்பேடுகள் இயேசுவின் சிலுவை மரணத்துக்கு சாட்சியிடுகின்றன. பாபிலோனின் சட்டத் தொகுப்பில், ஆலோசனை 43A வில், ''பஸ்காபண்டிகை நாளில் இயேசு தூக்கிலிடப் பட்டார் (யூதர்களின் வார்த்தையில் ''சிலுவையில் அறையப்பட்டார்''.) என்று சொல்லப்படுகிறது; ரோம வரலாற்று ஆசிரியர், கொர்நெலியு டாஸிடஸ், எழுதும் போது, தனது அனல்ஸ் (ஒரு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளில்) 15:44-ல், ''கிறிஸ்தஸ் (கிறிஸ்து) பொந்தியுபிலாத்து எனும் அதிபதியின் கைகளால் தண்டிக்கப்பட்டார்" என்று எழுதினார். மற்றொரு வரலாற்று ஆசிரியர் சமோஸ்ட்டாவைச் சேர்ந்த லூஸிடஸ் எழுதுகையில் கிறிஸ்து, "பலஸ்தீனாவில் சிலுவையில் அறையப்பட்ட மனுஷன்" என்று எழுதினார். கிறிஸ்து சிலுவையில் மரித்தார் என்பதில் எந்த சந்தேகத்துக்கும் இடமில்லை.

## இயேசுவின் உயிர்த்தெழுதலாகிய சாட்சியம்

ஒரு இக்கட்டான கேள்வி என்னவெனில், "இயேசு மரித்து மூன்று நாட்களுக்குப் பிறகு உயிரோடு எழுந்தாரா?" இயேசு மதிர்தோரிலிருந்து தேவனால் எழுப்பப்பட்டார் என

விசுவாசிப்பதற்கான மூன்று காரணங்கள்: (1) வெறுமையாக்கப்பட்ட கல்லறை (2) உயிர்த்தெழுதலுக்குப் பிறகு கொடுக்கப்பட்ட தோற்றங்கள் (3) கிறிஸ்தவத்தின் பிறப்பு

**★ வெறுமையாக்கப்பட்ட கல்லறை**

சாட்சியங்களை ஆய்வு செய்ததன் பேரில், அநேக புதிய ஏற்பாட்டு வல்லுனர்களால் வெறுமையாக்கப்பட்ட கல்லறை ஒரு வரலாற்று மதிப்புமிக்கதாக கருதப்படுகிறது. இந்தக் கண்ணோட்ட மாற்றத்திற்கு அநேக காரணங்கள் உண்டு.

(1) வெற்றுக் கல்லறையா யில்லாதிருந்தால், அப்போஸ்தலர்கள் இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பபட்டார் என்பதை விசுவாசித்திருக்க மாட்டார்கள். முதல் நூற்றாண்டு யூதர்கள் சரீர உயிர்த்தெழுதல் நடைபெறாமல் இருந்திருந்தால், ஆவிக்குரிய மாம்ச உயிர்த்தெழுதலை நினைத்துக் கூடப் பார்க்க இயலவில்லை.



இயேசு மரித்தோரிலிருந்து தேவனால் எழுப்பப்பட்டார் என விசுவாசிப்பதற்கான மூன்று காரணங்கள்:
(1) வெறுமையாக்கப்பட்ட கல்லறை
(2) உயிர்த்தெழுதலுக்குப் பிறகு கொடுக்கப்பட்ட தோற்றங்கள்
(3) கிறிஸ்தவத்தின் பிறப்பு

(2) அப்போஸ்தலர்கள் அப்படியொரு கதையை (கற்பனையாக) உருவாக்கியிருந்தாலும் அவர் சொன்னவற்றை யாரும் விசுவாசித்திருக்க மாட்டார்கள். அவரது சரீரம் அங்கே இல்லாதிருந்தால், அப்போஸ்தலர்கள் யூதர்களை இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்று உணர்வடையச் செய்திருக்க முடியாது.

(3) கல்லறை வெறுமையாக இல்லாதிருக்குமேயாகில், யூத அதிகாரிகள் அவரது சரீரத்தை கொண்டு வந்து நேரில் வைத்து அப்போஸ்தலர்கள் பொய்யான தகவல்களை (உயிர்த்தலை) போதிக்கிறார்கள் என நிரூபித்திருக்கலாம். இயேசு அடக்கம் பண்ணப்பட்ட கல்லறைத் தோட்டத்தை யூதர்களும் அறிந்திருந்தார்கள்; அவரைப் பின்பற்றினோரும் அறிந்திருந்தனர். இயேசுவின் சரீரம் அங்கே இருந்திருக்குமானால் பிரதான ஆசாரியர்கள் சரீரத்தை கைப்பற்றுவதற்கு மிகவும் எளிதாயிருந்திருக்கும்; ஆனால் கைப்பற்ற இயலவில்லை. மாறாக, சரீரம் அங்கே இல்லாதிருந்தமைக்குக் காரணம் அவரைப் பின்பற்றினவர்கள்

காவலர்கள் நித்திரையாயிருக்கையில் களவாகக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லத் துணிந்தார்கள்.

(4) வெறுமையான கல்லறையைக் குறித்து பவுல் வரலாற்றுச்சம்பவ ரீதியிலான சாட்சியத்தைக் கொடுக்கிறார். 1 கொரிந்தியர் 15:3-8-ல் வெறுமையான கல்லறை குறித்து அநேக காரியங்கள் சாட்சியமாக இருப்பதை ஆதிக்கிறிஸ்தவர்களின் அறிக்கைகளோடு பவுல் சுட்டிக் காட்டுகிறார். ஆரம்ப கால யூதக் கிறிஸ்தவர்களுக்கு, ''அவர் உயிர்த்தெழுந்தார்" எனும் சொற்றொடர், அவரது சரீரம் உயிர்த்தெழுந்ததையே பொருட்படுத்தும். உயிர்த்தெழுந்ததை யாரும் நேரில் கண்ட சாட்சியாயிராதபடியினால், அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என எப்படி நாள் கணக்கு குறிப்பிட முடியும் அந்த நாளிலே தான் ஸ்திரீகள் வெறுமையான கல்லறையைக் கண்டார்கள் என்பது தெளிவு.

(5) ஸ்திரீகள் வெறுங் கல்லறையை கண்டுபிடித்தனர் என்பது புதிய ஏற்பாட்டுக்கு நம்பத்தகுந்த ஆதாரமாக இருக்கிறது. அந்த நேரத்தில், யூதப் பெண்மணிகள் சமுதாய ஏணியின் கீழ் மட்டத்தில் இருந்தனர், ஆதலால் அவர்களுடைய சாட்சியங்கள் சட்ட விசாரணைக் கூடாரத்தில் ஒன்றுக்கும் உதவாதவைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. பெண்களைக் காட்டிலும், ஆண்களால் சொல்லப்படும் கட்டுக்கதைகள் கூட, பிரதான சாட்சியங்களாக வெறுங்கல்லறையைக் குறித்த விஷயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**★ உயிர்த்தெழுதலுக்குப் பின் கொடுக்கப்பட்டத் தோற்றங்கள்**

நாம் முதலாவது பாடத்தில் கற்றுக் கொண்டபடி, 1 கொரிந்தியர் 15:3-8ல் பவுல் மேற்கோள் காட்டி குறிப்பிடுபவை, அவருக்குக் கொடுக்கப்பட்டத் தகவல்கள், அநேகமாக அப்போஸ்தலர்களால், இயேசு மரித்த ஐந்து வருடங்களுக்குள் நடந்தவைகளைச் சொல்லி தகவல் அளித்திருக்கலாம். உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர் தோற்றமளித்த சம்பவங்கள், இந்த கிரமமாய்க்காட்டப்பட்டுள்ள வரிசையில் கட்டுக்கதையாக காண இயலாது. பவுல், உயிர்த்தெழுந்த கிறிஸ்து முதலாவது பேதுருவுக்கும், பிறகு பன்னிருவருக்கும், 500பேருக்கு ஒரே நேரத்திலும், தரிசனமானார், அவர்களில் அநேகர் அந்நாள் வரை உயிரோடிருந்திருக்கிறார்கள், பிறகு யாக்கோபுக்கும், மறுபடியும் பன்னிருவருக்கும் தரிசனமானார் என்பதை தெளிவுபடுத்தினார். இந்த புராதன அறிக்கையை

எவ்வளவுக்கதிகமான வேத நிபுணர்கள் கற்றார்களோ அவ்வளவுக்கதிகமாய் உணர்வடைந்து அவைகள் நம்பத்தகுந்த வரலாற்று அடிப்படையிலான அறிக்கைகள் எனக் கண்டனர்.

சில மக்கள் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து அளித்த தோற்றங்களெல்லாம் கட்டுக் கதைகள் என்று சொல்லுவதிலே உறுதியாய் இருந்தனர். இருந்தும், பிரதான வரலாற்று ஆசிரியர்கள் ஆழமான மையக்கருத்தைக் கொண்டு வரலாற்று உண்மைகளை மறைக்க இரண்டு தலைமுறையால் ஒன்று கூட்ட முற்படும் கட்டுக் கதைகள் கூட போதுமானதாயிராது என்று விளக்கமளிக்கப்பட்டது. கண்ணாரக் கண்ட சாட்சிகளால் அவர்களுடைய வாழ்நாள் காலத்திற்குள்ளாக சுவிசேஷங்களும் நிருபங்களும் எழுதப்பட்டன; அவர்கள் எந்த தவறுகளையும் எதிர் கொள்வோராயிருந்தனர்.

**கிறிஸ்தவத்தின் பிறப்பு**

தெய்வ நம்பிக்கையற்றவர்கள் கூட இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்ததை அவருடைய சீஷர்கள் விசுவாசித்தார்கள் என்று ஒத்துக் கொள்கின்றனர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அப்போஸ்தலர்கள் விசுவாசியாமல் இருந்திருந்தால், கிறிஸ்தவமே தோன்றியிராது.

கேள்வி என்னவெனில், "ஆதிக் கிறிஸ்தவர்கள் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று ஏன் விசுவாசித்தார்கள்? தங்களுடைய விசுவாசத்தின் துவக்கத்தை ஒருவர் எப்படி விளக்கிச் சொல்லக் கூடும்? கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்கிற அவர்களுடைய விசுவாசம், கிறிஸ்தவத்திற்கு இருக்கும் செல்வாக்கின் விளைவால் வந்ததா? இல்லை ! பெந்தகோஸ்தே நாளில் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை அப்போஸ்தலர்கள் அறிவிக்கும் வரை கிறிஸ்தவம் தோன்றவில்லை. (அப்போஸ்தலர் 2).

யூத மத செல்வாக்கினால் அவர்களின் விசுவாசம் வந்ததா? இல்லை ! நியாயத்தீர்ப்பு நாளாகிய கடைசி நாளில் உயிர்த்தெழுதல் உண்டு என்று யூதர்கள் விசுவாசித்தனர் (எசேக்கியேல் 37; ஏசாயா 26:19; தானியேல் 12:2). பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், கிறிஸ்து பூமியில் இருந்த நாட்களிலும் உயிரோடு எழுப்பப்பட்டவர்கள் உண்டு; ஆகிலும் அவர்கள் மறுபடியும் மரித்தார்கள். நீதியுடன் கூடிய மரணம் அடைந்தோர் நித்திய ஜீவனுக்கென்று உயிர்ப்பிக்கப்பட்டு முடிவு காலங்களில் மகிமையடைவார்கள் என்று யூதர்கள்

நம்பினார்களேயன்றி, மனித வாழ்நாள் வரலாற்றில் உயிர்ப்பிக்கப்படுவதை அவர்கள் விசுவாசிக்கவில்லை. ஆகையால், ஆதி சீடர்கள் யூதர்களின் கட்டுபாட்டின் (தாக்கம்) நிமித்தமே கிறிஸ்துவின் உயிர்தெழுதலை விசுவாசித்தனர் என்பது நியாயமற்றது.

ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்க வைக்க ஒரே காரணியாய் இருந்தது, கிறிஸ்து உண்மையிலேயே உயிர்த்தெழுந்தார், நாற்பது நாளளவும் அவர்களுக்கு அவர் உண்மையிலேயே தரிசனமானார் என்பவைகளே என்று தெளிவாகக் காணப்படுகிறது. இயேசு உண்மையிலேயே மரித்தோரிலிருந்து எழுந்ததை மறுதலிப்போர், கிறிஸ்தவத்தின் பிறப்பையும் துரித வளர்ச்சியையும் குறித்து எப்படி விளக்கம் கொடுப்பார்கள்? கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாவிடில், சபையின் துவக்கத்தின் மேல் ஆதாரத்தை தர்க்கிப்பில்லாமல் விளங்கப்பண்ண முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அப்போஸ்தலர்கள் நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களும், எதைப் போதித்தார்களோ அதை முறையாய் பயன்படுத்தக் கூடியவர்களுமாய் இருந்துள்ளனர். அவர்கள் நடந்ததையைக் காணும் போது, உயிர்த்தெழுதலைக் குறித்து பொய் சொல்லியிருக்க முடியாது.

இன்னும் அதிகமாக, மருத்துவ நிபுணர்கள் கூறுவது என்னவெனில், ஒழுக்கங்கெட்டவர்களால் வாரினால் அடித்துத் தாக்கும் நிலையை ஏற்றுக் கொண்டு இயேசு தாக்குப் பிடித்திருப்பதற்கு எந்த வழியும் இல்லை; மேலும் இரக்கமற்று சிலுவையில் அறையப்படுவதையும், ஈட்டியால் அவரது இருதயத்தில் குத்தப் படுவதையும் அவரால் தாக்குப் பிடித்திருக்க இயலாது. கல்லறை குழுமையில் அவர் உயிர்த்தெழுந்து வருவதற்கு ஏதுவான அளவுக்கு, அவர் உயிரோடே அடக்கம் பண்ணப்பட்டிருக்க இயலாது என்கின்றனர்.

மேலும், மனோ தத்துவ நிபுணர்கள் கூறுவது, மனத் தோற்றத்தின் அடிப்படையில் உயிர்த்தெழுதல் வரலாறை விளக்கிச் சொல்ல முடியாது. அநேக ஜனங்கள் ஒரே மாதிரியான வரலாறை பிரம்மையின் அடிப்படையில் சொல்ல இயலாது.

வெறுங்கல்லறை, உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டத் தோற்றம், கிறிஸ்தவத்தின் பிறப்பு ஆகிய அனைத்தும், ஒரே முடிவுரையைத்தான் கொடுக்கிறது: **இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்.**

# 9 அன்றுபோல் இன்றும் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியை பெற முடியாதா?

அன்று பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், இராஜாக்களைப் போலவோ, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போலவோ, ஆதி அப்போஸ்தலர்களும் கொர்நெலிவு வீட்டாரும் யோவேல் 2:28ல் சொல்லப்பட்டபடி பரிசுத்த ஆவியை பெற்றதுபோலவோ, நேரடியாக யாரும் இன்று பரிசுத்த ஆவியைப் பெறுவதில்லை. யோவேல் 2:28-29 ன் படியாக ''ஆவிக்குரியவரங்களை'' நடப்பிக்கும்படி அப்போஸ்தலர்கள் கைகள் வைப்பதின் மூலம் கொடுக்கப்பட்ட முறையில் இன்று கிறிஸ்தவர்கள் பெறமுடியாது. ஏனெனில் வேதப்புத்தகம் அந்த இடத்தைப் பெற்றுள்ளது; மேலும் கொடுப்பதற்கு அப்போஸ்தலர்கள் யாரும் உலகில் இல்லை (1 கொரிந்தியர் 12:7)

**இன்று நாம் வரத்தைப் பெறுகிறோமா?**

குழப்பம் எங்கே? அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஆவிக்குரிய வரங்களை கொடுத்ததற்கும் இயேசுவும் அப்போஸ்தலர்கள் நேரடியாக பரிசுத்த ஆவியை பெற்றதற்கும் இவர்களால் வித்தயாசம் காண இயலவில்லை. அவைகளுக்கான நோக்கங்களையும் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெறும்போது பெறுகிற பரித்த ஆவியின் வரத்தையும் இவர்களால் அடையாளம் காண இயலவில்லை.

முதல் முறையாக சபை ஸ்தாபிதமாவதற்கு காரணியாயிருந்த கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்ற வரலாறு அப் 2:36-41 ல் விவரிக்கப்படுகிறது. அப் 2: 14 ல் தொடங்கி பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கம் பண்ணுகிறார்கள். வச.36-ல் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே தேவனால் " ஆண்டவரும் " (ஆளுகை செய்பவரும்) "கிறிஸ்துவும்" (அபிஷேகம் பண்ணப்பட்பவருமாயிருக்கிறார்) என்றும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டார் என்றும் பேதுரு சொன்னார். வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இருதயத்தில் குத்தப் பட்டவர்களானார்கள். அப்போஸ்தலர்களை பார்த்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். பேதுரு அப். 2:38ல், 5 குறிப்புக்களைக் கொடுக்கிறார்:

இரண்டு கட்டளைகள் – மனந்திரும்பு, ஞானஸ்நானம் பெறு

இரண்டு வாக்குத்தத்தம் – பாவமன்னிப்பு, பரிசுத்த ஆவியின் வரம்

அதிகாரம் (Authority) – இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்

வச. 39 – ல், மேலே கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் இரண்டும் ''உங்களுக்கும்" (அன்று, அங்கு நின்று கொண்டிருந்த கூட்டத்தாருக்கும்), "உங்கள் பிள்ளைகளுக்கும்" கர்த்தராகிய தேவன் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்று சொன்னார். இந்த ''தூரத்திலுள்ள யாவரும்'' என்பது அன்று ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் துவங்கி (வச.39–41) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை ஞானஸ்நானம் பெற்றுள்ள, பெறுகிற, பெறப்போகிற அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், ''பாவமன்னிப்பு, பரிசுத்த ஆவியின் வரம்". இவைகளை உள்ளே "வாசம் பண்ணும்" பரிசுத்த ஆவியின் வரம் என்று வசனம் சொல்லுகிறது.



கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அப்போஸ்தலர்கள் விசுவாசியாமல் இருந்திருந்தால், கிறிஸ்தவமே தோன்றியிராது.

இயேசு அப்போஸ்தலருக்கு தாம் அனுப்பப்போகிற "தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை'' வாக்குத்தத்தம் பண்ணிக்கொண்டிருக்கையில் ஸ்காரியோத் அல்லாத யூதா ஒரு கேள்வியைக் கேட்டார். அதில், "ஆண்டவரே, உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல், எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப் போகிற காரணம் என்ன?" என்று கேட்கப்பட்டது. அதற்கு இயேசு மறுமொழியாக, "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைகொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் (பிதா, குமாரன், பரிசுத்த ஆவி) அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்றார். அவர் இங்கே "ஆவிக்குரிய வரங்களை பெற்று அற்புத வரங்களை நடப்பிக்கிறோம்" என்றோ "ஆவியின் அபிஷேகம் பெற்றோம், அந்நிய பானவுகளை பேசுகிறோம். பிசாசுகளை விரட்டுகிறோம்" என்றோ சொல்லுகிறவனோடே அல்ல; வசனத்தைக் கைகொள்கிறவனோடே வாசம் பண்ணுவதாகக் கூறுகிறார்.

ரோமர் 8:9–11–ல், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கமாட்டீர்கள். இன்று பரிசுத்த ஆவியைப் பெறுவதாகக் கூறுவோர் உலகப் பிரகாரமாய்த் தங்களுக்குள்ள ஆதாயத்தையே பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்துப் பாருங்கள்.

(தேவன்) தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் ஆவிக்கு விரோதமாயிருக்கக் காரணம் என்ன!

மேலும் கிறிஸ்து உங்களில் வாசமாயிருந்தால் பாவமற்ற வாழ்க்கை உங்களில் தொடர வேண்டும்.

கொலோசெயர் 3:16ன் படி, கிறிஸ்துவின் வசனம் நிறைவாக வாசம் பண்ணுவதன் மூலம் ஆவியானவர் வாசம் பண்ணுகிறார் (2 தீமோத்தேயு 3:16, 17).

**எப்பொழுது வாசம் பண்ணத்துவங்குகிறார்?**

“நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளான போது, (அப்: 2:38, 39ல்) வாக்குத்தத்தம் பண்ணபப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்'' என்று வாசிக்கிறோம் (எபேசியர் 1:13, 14). ஆவியானவர் வாசம் பண்ணுவதற்கு கடந்த கால அடையாளம், நாம் விசுவாசிகளாகும்போது (ஞானஸ்நானம் பெறும்போது) ஆவியானவர் நம் மீது ஆவிக்குரிய முத்திரையிட்டு, “இனி இவர் எங்கள் பொறுப்பில் இருக்கிறார்'' என்று அடையாளப்படுத்தப்படுகிறார். எதிர்கால வாக்குத்தத்தமாக, நித்திய மீட்பை நாம் அடைவோம் என்பதற்கு நமக்கு அடையாளமாக அச்சாரம் (உறுதிமொழி) அளித்திருக்கிறார்.

**வாசம் பண்ணும் ஆவியின் வரம் – ஒரு சிறு விளக்கம்**

ஒரு நீட்ட கம்பியை எடுத்து தீயில் நீட்டுகிறீர்கள். கம்பி சூடு ஏறுகிறது. நிறம்மாறி பழுப்பு நிறமாகிறது. தொட்டுப்பார்த்தால் தீயின் உஷ்னம் அதில் தகிக்கிறது. ஆனால் அந்தக் கம்பியில் தீயே வந்துவிட்டதா? இல்லை. அந்தக் கம்பியில் இருக்கும் உஷ்னமும் பழுப்பு நிறமும் எதைக்காட்டுகிறது? தீ கொடுத்த வரம் அது. அதே போல்தான் பரிசுத்த ஆவி கொடுத்த வரமே நமக்குள் வாசம் பண்ணி, நம்முடைய இருதயத்திலும் செயலிலும் புது வாழ்வை கொண்டு வருகிறது. ஆவியின் கனியோ (வரமோ) “அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை'' (வலியுறுத்தல் என்னுடையது) (கலாத்தியர் 5:22, 23).

எனவே கிறிஸ்துவின் சபையார் ஆவியை முறையாய் பெற்றவர்களும் முறையாய் போதிக்கிறவர்களுமாவர்.

தொடரும்

அன்புடன்
**இ.ஏ.ஆறுமுகம் (போதகர்)**
திண்டுக்கல்.

# 7 தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் இயேசு

❖ அவர் (இயேசு) பரலோகத்திற்குப் போய் தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார் (1பேது. 3:22)

❖ உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (எபி 1:3).

❖ பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார் (எபி 8:1).

❖ தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபி.12:2).

❖ தேவன் அவரை (இயேசுவை) உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படிச் செய்தார் (எபே.1:21).

❖ கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (கொலோ. 3:1).

❖ மனுஷகுமாரன் (இயேசு) தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் (அப்.7:56).

❖ நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடுகூட உட்கார்ந்ததுபோல... (வெளி. 3:21).

மேற்கண்ட வசனங்களின் மூலமாக இயேசுவானவர் பரலோகத்தில் எங்கே உட்கார்ந்திருக்கிறார் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்கிறார். பரலோகத்தில் மகத்துவ சிங்காசனம் இருக்கிறது. அதில் மகத்துவமானவர் உட்கார்ந்திருக்கிறார். இயேசுவானவர் அந்த மகத்துவ சிங்காசனத்தின் அதாவது மகத்துவமானவருடைய வலது பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார். நேர்த்தியான இடங்களில் எனக்கு பங்கு கிடைத்தது (சங். 16:6) என்று தாவீது கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசனமாக இதை அறிவித்திருக்கிறான். இயேசுவானவர் மனுஷனாக உலகத்திற்கு வருமுன்னரே தமக்கு தேவன்மேல் இருக்கிற நம்பிக்கையை தாவீதின் மூலமாகத் தெரியப்படுத்தியிருந்தார். சங்கீதம் 16:8-10 வரைக்கும் வாசிக்கும்போது, கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் தேவன் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் (இயேசு) அசைக்கப்படுவதில்லை என்றும் என் (இயேசுவின்) மாம்சம் நம்பிக்கையோடு தங்கியிருக்கும்; என் (இயேசு) ஆத்துமாவை பாதாளத்தில் விடீர்'' என்றும் சொல்லியிருக்கிறார். இந்த வசனங்களில் கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்று சொல்லியிருப்பது இயேசுவானவர் தமக்கு முன்னே இருக்கிற தேவனை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று

அர்த்தமாகும். இயேசுவுக்குப் பிதாவானவர் வலதுகரத்தைப் போல பலமுள்ளவராக இருந்தாலும் சிங்காசனத்தைப் பற்றிய விஷயத்தில் தேவனுடைய வலது பக்கத்தில் இயேசுவானவர் வீற்றிருந்து பரிபூரண ஆனந்தமும் நித்திய பேரின்பமும் அடைந்திருக்கிறார் (சங்.16:11). இதைக் குறித்து பரிசுத்த ஆவியானவரும் பேதுருவின் மூலமாக தாவீதின் சங்கீதத்தை மேற்கோள்காட்டி வெளிப்படுத்தியிருக்கிறார் (அப்;.2,25-32).

இயேசுவானவர் மனுஷனாக உலகத்தில் வருவதற்கு முன்னே தேவனுக்கு சமமாக இருந்ததுபோல (பிலி.2:6), இப்பொழுதும் சமமாக இருக்கத்தக்கதாக உயர்த்தப்பட்டிருக்கிறார். ஆகையால் இயேசு: நான் ஜெயங்கொண்டு என் பிதாவின் சிங்காசனத்தில் அவரோடுகூட உட்கார்ந்திருக்கிறேன் என்று இயேசு சொல்லும்போது அவர் என்கிற ஒருவர் இல்லாவிட்டால் அவரோடுகூட உட்கார்ந்திருக்கிறேன் என்று இயேசு சொல்லவேண்டியதென்ன? மேலும் பிதாவும் குமாரனும் ஒரே ஆளாக இருந்தால் பரலோகத்தில் மகத்துவ சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற மகத்துவமானவர் யார்? அதுவுமல்லாமல் பிதாவின் வலதுப் பக்கத்தில் இயேசு உட்கார்ந்து யாரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்? இயேசு யாரிடத்தில் நமக்காக வேண்டுதல் செய்கிறார்? யாரிடத்தில் பரிந்துபேசுகிறார்?

மகத்தவ சிங்காசனத்தில் மகத்துவமானவர் உட்கார்ந்திருக்கிறார் என்று சொல்லாமல் இயேசுவே மகத்துவ சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்று சொல்லியிருந்தால் பிதாவும் குமாரனும் ஒரே ஆள் என்பதை நம்புவதற்கு வாய்ப்பிருக்கும். அப்படிச் சொல்லாமல் மகத்துவ சிங்காசனத்தையும், அதில் மகத்துவமானவர் உட்கார்ந்திருக்கிறதையும் சொல்லிவிட்டு, பின்பு அவருடைய வலது பக்கத்தில் இயேசு உட்கார்ந்திருக்கிறார் என்று இன்னொரு சிங்காசனத்தையும் காண்பிக்கும்போது, பிதாவும் குமாரனும் ஆள்தத்துவத்தில் ஒருவராக இல்லாமல் இரண்டுபேராய் இரண்டு சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றுபரலோகத்தின் சிங்காசனங்களை குறித்துப் பரிசுத்த ஆவியானவர் தெரியப்படுத்தியிருக்க, அதை மறைக்கிற அல்லது மறுக்கிற மனுஷன் யார்? பிதாவும் குமாரனும் தங்கள் தங்கள் சிங்காசனங்களில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அன்புடன்
**சகோ. ஆசீர்வாதம்**
திண்டுக்கல்.



**அப் 2:38**

2 கட்டளைகள்

மனந்திரும்பு, ஞானஸ்நானம் பெறு

2 வாக்குத்தத்தங்கள்

பாவமன்னிப்பு, பரிசுத்த ஆவி

# என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?

ஆதி 4:9

**அறிமுகம் :**

அ. நம்முடைய சபைகளில் நாம், ஆத்துமாக்களை பெற்றெடுத்து பின் அப்படியே விட்டுவிடுவதினால் சபை வளர்ந்துவிடாது.

ஆ. தேவனுடைய குடும்பத்தில் நாம் அடிக்கடி எதிர்நோக்குகின்ற பிரச்சனை இது.

இ. தேவன் நம்மை என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறார்?

I) **அவர்களுடைய ஆத்துமாக்களை காவல் காத்துக்கொள்ளுங்கள்**

எபி 13:17 – ''உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் பிரயோஜன மாயிருக்கமாட்டாதே. ”

II) **ஆவிக்குரியவர்கள் மீட்டமைக்கும் வேலையைச் செய்ய வேண்டும்**

கலா 6:1 – “சகோதரரே ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு.”

III) **பெலவீனமானவர்களுடைய பெலவீனங்களை தாங்குங்கள்**

ரோ 15:1 ''அன்றியும் பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்.

IV) **ஒருவர் பாரத்தை ஒருகூர் தாங்குங்கள்**

கலா 6:2 ஒருவர் பாரத்தை ஒருகூர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்”

V) **எச்சரியுங்கள் ஆறுதலாயிருங்கள் தாங்குங்கள் மற்றும் பொறுமையாயிருங்கள்**

1தெச 5:14 மேலும் சகோதரரே நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள் திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள் எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.”

VI) **தவறு செய்பவர்களை மாற்றுங்கள்**

யாக் 5:20 தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.

**இறுதியாக**

அ) நாம் நம்முடைய சகோதரர்களின் காவலாளி

ஆ) அவர்கள் சபையை விட்டு செல்லும் நிலையில் அவர்களை தக்கவைக்க நாம் நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

# ஜாதி அமைப்புகளை தடை செய்தால் என்ன?

- விழுப்புரம், தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள சில ஊர்களில் மாதத்திற்கு ஒரு முறை சில ஜாதி சங்கள் திருமண மண்டபங்களில் இளைஞர்களுக்கு மட்டும் ஒரு கூட்டம் நடத்தி தங்கள் ஜாதி அமைப்பின் பலத்தை பற்றி " மூளைச்சலவை" செய்கின்றனர்.
- இந்த கூட்டங்களில் தங்கள் எதிரியாக கருதும் மற்ற ஜாதியினர் மீது விரோதம் ஏற்படும் வண்ணம் கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன.
- ஒரு தலைமுறையை ஜாதிய உணர்வோடும், மற்ற ஜாதிகள் மீது விரோத மனப்பான்மையோடும் உருவாக்கி வருகின்றனர்.
- இந்த விரோதமும் வெறுப்பும் வெடிப்பாக வெளிப்படுவதுதான் ஆங்கங்கே நடக்கும் ஜாதி மோதல்கள்.
- உரிமைகளுக்காக போராடுகிறோம் என்று சொன்னாலும், இவற்றின் இலக்கு தேர்தல்.
- ஜாதி அடிப்படையில் செயல்படும் அமைப்புகள் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றை தங்களில் பலத்தை காண்பித்து தேர்தலில் பெரிய கட்சிகளிடம் சீட்டுவாங்க நடத்துகின்றன.
- இவர்களது பதவி ஆசைகளுக்காக இளைஞர்கள் பலிகடா ஆக்கப்படுவது தான் கொடுமை.
- இதன் விளைவு 1. வெறுப்பு அரசியலின் விளைவுகள். வெறுப்பு அரசியலை பின்பற்றினவர்கள் இறுதியில் அதற்கே பலியானதை முந்தைய வரலாறுகள் கூறுகின்றன. யூதர்கள் மீது நாசிகள் வளர்த்த வெறுப்பு உலகப்போரில் முடிந்தது.
- இதன் விளைவு 2. இளைஞர்கள் அவர்களது தோல்விக்கு அவர்களுக்கான வாய்ப்புகள் யாராலோ பறிக்கபட்டது தான் காரணம் என நம்ப வைக்கப்படுவதால், அவர்கள் தங்கள் பலம் என்ன பலவீனம் என்ன என்று இறுதி வரை தெரியாமல் தாழ்வுமனப்பான்மைக்குள் தள்ளப்பட்டு, முன்னேற்றமின்றி முடங்கி போகிறார்கள்.
- இது போன்ற பல தீமைகளுக்கு ஆதாரமாக இருக்கும் ஜாதி அமைப்புகளை தடை செய்தால் என்ன?

நன்றி : புதிய தலைமுறை வார இதழ்

# 1 சவுல் பவுலாக மாறுதல்

வசன பகுதி : அப் 9:1-20

**சம்பவ சுருக்கம்:**

சவுல் என்பவர் கிறிஸ்தவர்களை மிகவும் துன்பப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் பிரதான ஆசாரியரிடத்தில் நிருபங்களை வாங்கி கிறிஸ்தவர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு சென்று அவர்களை துன்பப்படுத்தி, சிறைபடுத்தி தமஸ்கு என்றும் ஊருக்கு சிலரை அழைத்துக் கொண்டு சென்றார். வழியிலே திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி வந்து அவரை சுற்றி பிரகாசித்தது. அவர் கீழே விழுந்தார். அப்பொழுது, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? என்று கர்த்தர் அவனிடம் கேட்டார். அவனோ, ஆண்டவரே நீர் யார் என்றான். நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைப்பது உனக்கு கடினமானது என்றார். சவுல் நடுங்கி திகைத்து, 'ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?' என்று கேட்டார். கர்த்தரோ நீ பட்டணத்துக்குள்ளே போ அங்கே உனக்கு சொல்லப்படும் என்றார், சவுலிற்கு கண்கள் தெரியாமல் போயின. அவனுடன் வந்த மனிதர்கள் அவரை கைபிடித்து பட்டணத்திற்குள் கொண்டுபோயினர். சவுல் மூன்று நாள் பார்வையற்றவராய் உபாவாசமிருந்தார். அனனியா என்னும் ஒரு சீஷன் தமஸ்குவில் இருந்தார். அவரிடத்தில் கர்த்தர் சவுலை பார்த்து பேசு என்றார். அனனியா சவுலை பற்றி கேள்விப்பட்டபடியினால் பயந்தார்; ஆனால் கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அனனியா சவுல் இருந்த வீட்டுக்குள் சென்று, சவுலிற்கு தேவனுடைய வார்த்தைகளை போதித்தார். சவுல் பார்வையடைந்து, ஞானஸ்நானம் பெற்றார். பின்பு சவுல், 'கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களிலே பிரசங்கம் செய்தார்.



டியர் குட்டீஸ்! யாராவது நம்மை துன்பப்படுத்தினார்கள் என்றால், அது அவர்கள் ஆண்டவரை துன்பபடுத்துகிறார்கள் என்றுதான் அர்த்தம். ஆகையால் நாம் பொறுமையாயிருப்போம். மேலும் சவுல் தேவனுடைய பிள்ளையாக மாற (இரட்சிக்கப்பட ) ஞானஸ்நானம்

பெற்றார். அவர் உபவாசித்த போதோ, ஜெபித்த போதோ இரட்சிக்கப்படவில்லை. இரட்சிக்கப்படும்படியாக அவர், தேவனுடைய வார்த்தையை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது. மேலும் இரட்சிக்கப்பட்ட உடனே பவுல் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிவித்தார். நாமும் ஆண்டவரை தினமும் அறிவிக்க வேண்டும். கிறிஸ்தவர்களை துன்பப்படுத்திய சவுல் கிறிஸ்துவிற்காக துன்பம் அனுபவிக்கும் பவுலாக மாறினார்.

**மனனவசனம்:**

2கொரி 5:17 '' ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் ; பழையவைகள் ஒழிந்துப்போயின, எல்லாம் புதிதாயின".

# பாடம் 2 தபித்தாள் என்ற தொற்காள்

வசன பகுதி : அப் 9:31–43

**சம்பவ சுருக்கம்:**

யூதேயா, கலிலேயா, சமாரியா என்னும் நாடுகளில் கிறிஸ்துவினுடைய சபைகள் பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின. பேதுரு எல்லாரையும் சந்தித்து வந்தார். லித்தா என்னும் ஊருக்கு பேதுரு சென்று பரிசுத்தவான்களை ஊக்கப்படுத்தினார். அந்த ஊரிலே ஐனேயா என்னும் ஒருவர் எட்டு வருச காலமாய் திமிர்வாதமுள்ளவனாய் இருந்தார். பேதுரு அவரை பார்த்து, 'ஐனேயாவே! இயேசு உன்னைக் குணமாக்குகிறார்' என்ற சொன்னார். உடனே ஐனேயா குணமானார். இதனால் அந்த ஊர் மக்கள் அநேகர் கர்த்தரை விசுவாசித்தார்கள். அப்பொழுது, லித்தா ஊருக்கு அருகிலிருந்த யோப்பா என்னும் பட்டணத்திலே தபீத்தாள் ( எ ) தொற்காள் என்னும் ஒரு சீஷி இருந்தார், அவர் மிகுந்த நற்கிரியைகளையும் தருமங்களையும் செய்து வந்தார். அந்நாட்களிலே தபீத்தாள் வியாதிப்பட்டு மரித்துப் போனாள். பேதுரு லித்தா ஊரில் இருக்கிறார் என்று யோப்பா பட்டணத்து சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் பேதுருவை அழைத்துவரும்படி ஆட்களை



அனுப்பினார்கள். பேதுரு வந்தபோது அங்கிருந்த விதவைகள் எல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடன் இருக்கையில் செய்த உடைகளை காண்பித்து அவரை சூழ்ந்து நின்றார்கள். பேதுரு எல்லோரையும் வெளியே போகச் செய்து பிரேதத்தின் அருகில் முழங்காற்படியிட்டு, ஜெபம் செய்து, "தபீத்தாளே எழுந்திரு" என்றார். அவள் எழுந்து உட்கார்ந்து பேதுருவை கண்டாள். பேதுரு அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து தொற்காளை உயிருள்ளவளாக அவர்கள் முன் நிறுத்தினார். இந்த செய்தி யோப்பா பட்டணம் முழுவதும் பரவியது. அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

டியர் குட்டீஸ்! தபீத்தாள் (எ) தொற்கான் செய்த நற்காரியங்களையும், தருமங்களையும் நாம் பார்க்கையில் கிறிஸ்தவர்களாகிய நாமும் அப்படியே நற்காரியங்கள் செய்யவேண்டும். இவ்வளவு பெரிய அற்புதங்களை பேதுரு செய்தபொழுது ஜனங்கள் எல்லாரும் கர்த்தரை விசுவாசித்தார்கள். ஏனெனில் பேதுரு தன்னை ஜனங்கள் புகழவேண்டும், மதிக்க வேண்டும், பின்பற்ற வேண்டும் என தேவன் கொடுத்த வரத்தை பயன்படுத்தாமல், தேவனிடத்தில் ஜனங்கள் திரும்பும்படிக்கே செய்தார். நாமும் ஒவ்வொரு காரியங்களையும் தேவன் மகிமைப்படும்படிக்கே செய்ய வேண்டும்.

**மனன வசனம் : எபே 2:10**

" நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் "

## பாடம் 3 கொர்நெலியு

வசன பகுதி : அப் 10

**சம்பவ சுருக்கம் :**


இத்தாலியா பட்டாளத்திலே (ராணுவம்) கொர்நெலியு என்பவர் நூற்றுக்கு அதிபதியாக செசரியா என்னும் ஊரிலே இருந்தார். கொர்நெலியு தேவபக்தியுள்ளவராகவும், மிகுந்த தருமங்களை செய்யக்கூடியவராகவும், தன் குடும்பத்தினரோடு தேவனுக்கு பயந்தவராகவும், ஜெபிக்கிறவராகவும் இருந்தார். ஒருநாள் பகல் பொழுதில் தேவதூதன் வந்து, 'நீ யோப்பா பட்டணத்திற்கு ஆள் அனுப்பி பேதுருவை அழைத்து வா; நீ செய்ய வேண்டியதை அவர் உனக்கு சொல்லுவார். இப்பொழுது அவர் தோல் வேலை செய்கிற சீமோனுடைய வீட்டிலிருக்கிறார்' என்று

சொல்லும்படியான தரிசனங்கண்டார். பிறகு கொர்நெலியு இரண்டு பேரை அனுப்பினார். அதே வேளையில் பேதுரு, ஒரு கூடு தன்னிடத்தில் இறங்கி வரவும், அதற்குள் எல்லா பறவைகளும், மிருகங்களும் இருப்பதாகவும், பேதுருவே அடித்துப்புசி என சத்தம் கேட்பதாகவும், பேதுருவோ அது தீட்டு என சொல்வதாகவும் மூன்று முறை தரிசனங்கண்டார். கொர்நெலியு அனுப்பின மனுஷர்கள் பேதுருவை சந்தித்து அழைத்தனர். கொர்நெலியு தன் நண்பர் மற்றும் குடும்பத்தார் யாவரோடும் கூடி பேதுருவுக்காக காத்திருந்தார். பேதுரு அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கம் செய்தார். பேதுரு பிரசங்கம் செய்துக் கொண்டிருக்கையில் பரிசுத்த ஆவியானவர் வசனத்தை கேட்ட அனைவர் மேலும் வந்திறங்கினார். அவர்கள் யாவரும் பல பாஷைகளை பேசி தேவனை மகிழுகிறதை பேதுருவுடன் வந்திருந்த யூத விசுவாசிகள் கண்டபோது பிரமித்தார்கள். பேதுருவோ அவர்கள் எல்லோருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். சகோதரர்கள் கொடுத்தார்கள்.

டியர் குட்டீஸ்! கொர்நெலியு மிகவும் தேவபக்தி உள்ளவராகவும், நற்காரியங்களை மிகுதியாக செய்யக்கூடியவராகவும் இருந்தபோதும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தை நேரடியாக பெற்றப் போதும் கூட, அவருடைய பாவங்கள் நீங்கி இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தது. ஏனெனில், இரட்சிக்கப்பட தேவன் நியமித்த, இயேசு கூறிய ஒரே வழி ஞானஸ்நானம். நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

**மனனவசனம்**: மாற்கு 16:16

''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"



# 4 பேதுருவின் விடுதலை

வசனபகுதி: அப் 12: 1–19

**சம்பவ சுருக்கம்:**

ஏரோது ராஜா சபையிலே சிலரை துன்பப்படுத்தினார். மேலும் யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினால் கொலை செய்தார். அது யூதர்களுக்கு பிரியமானது என்று அறிந்து, பேதுருவையும் சிறையிலே போடுவித்தார். பேதுரு சிறையிலே இருக்கும் போது சபையார் மிகவும் ஊக்கத்தோடே ஜெபம் செய்தார்கள். ஏரோது குறித்த நாளுக்கு முந்தைய நாள் இரவில் கர்த்தருடைய தூதன் வந்து, தூங்கிகொண்டிருந்த பேதுருவை எழுப்பினார். பேதுருவின் கைகளில் கட்டப்பட்டிருந்த சங்கிலி அவிழ்ந்து விழுந்தது. தூதன் பேதுருவை சிறைச்சாலையை விட்டு வெளியே அழைத்து வந்தார். பேதுருவோ இதனை கனவு என நினைத்துக் கொண்டிருந்தார். பேதுருவை வெளியே அழைத்துக் கொண்டு வந்து விட்டபின்பு, தேவதூதன் சென்றுவிட்டார். பேதுருவுக்கு தெளிவு வந்து தேவன் தம்முடைய தூதனை அனுப்பி தன்னை விடுவித்ததை உணர்ந்து, மாற்குவின் தாயாகிய மரியாளின் வீட்டிற்கு சென்றார். அங்கே அநேகர் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். பேதுரு கதவை தட்டினபோது ரோதை எனும் பெண் யாரென்று அறிய ஒற்றுக் கேட்க வந்தாள். சத்தத்தை கேட்டு, அது பேதுரு என்று நிச்சியித்து கதவை திறவாமல் உள்ளே சென்று ஜெபித்துக் கொண்டிருந்தவர்களிடம் சொன்னாள். அவர்களோ ரோதை உளருவதாக கண்டார்கள். பின்பு கதவை திறந்து பேதுருவை கண்டு ஆச்சரியப்பட்டார்கள். பேதுரு, கர்த்தர் தன்னை விடுவித்த விதத்தை அவர்களுக்கு விவரித்துச் சொன்னார். பொழுது விடிந்த பிறகு பேதுருவை குறித்து ஏரோதும், காவலரும் மிகவும் கலக்கமடைந்தார்கள். பேதுருவோ செசரியா பட்டணத்துக்கு போய் அங்கே இருந்து ஊழியம் செய்தார்.



டியர் குட்டீஸ்! துன்ப நேரத்தில் ஊக்கமாக சபையார் ஜெபித்தார்கள். என்ன ஆச்சரியம் பாருங்கள். தேவன் எவ்வளவு அதிசயமாக பேதுருவை விடுவித்து வழி நடத்தினார். நாமும் துன்ப நேரத்தில் தேவனிடம் விசுவாசத்துடன், ஊக்கமாக ஜெபிப்போம். தேவன் நம்மையும் சத்தியத்தின்படி கிருபையாய் வழிநடத்துவார்.

**மனன வசனம்** : I யோவான் 5:14 “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்கு செவி கொடுக்கிறா ரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்”.

## இம்மாதக் கேள்விகள்

1. ஏன் மனுசகுமாரன் வந்திருக்கிறார் என இயேசு கூறினார்?
2. சிதறிப்போனவர்கள் என்ன செய்தார்கள்?
3. ''இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்'' என வாசிப்பதெங்கே?
4. மனந்திரும்பாமற்போனால், எல்லாரும் என்ன ஆவோம்?
5. பாவமன்னிப்பு பெற ஒவ்வொருவரும் மனந்திரும்பி என்ன செய்ய வேண்டும் என பேதுரு கூறுகிறார்?
6. எந்த மூன்றும் உலகத்தினால் (பிசாசு) உண்டானவைகள்?
7. பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க நாம் என்ன செய்ய வேண்டும்?
8. நாம் எப்போது மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்போம்.

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30-6-13**



## சிறுவர்க்கான கேள்விகள்

1. சவுல் என்பவர் யாரை துன்பப்படுத்தினார்?
2. சவுலை தமஸ்குவின் வழியில் சந்தித்தது யார்?
3. மனம் மாறிய பின் சவுல் என்ன செய்தார்?
4. பேதுரு உயிரோடு எழுப்பின பெண் யார்?
5. கொர்நெலியு எப்படிபட்டவராக இருந்தார்?
6. ஆயினும் அவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டிருந்தது?
7. பேதுருவிற்காக சபையார் என்ன செய்தார்கள்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30-6-13**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி

மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத பதில்கள்

| | |
|---|---|
| 1. 1கொரி 13:7 | 6. வெளி 2 : 4 |
| 2. 1யோவான் 4:8 | 7. யூதா 2 |
| 3. கலா 5 : 14 | 8. 1 யோவான் 2:15 |
| 4. ரோமர் 5 : 5 | 9. 2கொரி 5:14 |
| 5. 1 கொரி 13:8 | 10. கொலே 3 : 14 |

### மே மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. அரவிந்த் – கோவை
2. V. கௌசந்த் – திருப்பூர்
3. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
4. V. ஷைனி – மதுரை
5. V. ஷாலி – மதுரை
6. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
7. P. சாம் – மதுரை
8. P. ஜெபக்கனி – மதுரை
9. Y. ஜெயசுதா – சென்னை
10. R. சேம் – உக்கிரன்கோட்டை

### மே மாதம் பதில் எழுதியவர்கள்

Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
Mrs. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
Mrs. ஹெலன் திலக் – மதுரை
Mrs. மேரி ராஜ் – மதுரை
J. விஜய் – வளர்நகர்
Mrs. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
Mrs. ஜாஸ்மின் வின்சென்ட் – மதுரை
Mrs. ஜெமி நல்லையா – மதுரை
Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
Mrs. புஷ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
Mrs. கஸ்தூரி கலாவதி– மதுரை
Mrs. ஜான் செல்லையா – மதுரை
Mrs. மல்லிகா ஜெபமணி – தூத்துக்குடி
Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
Mrs. மெர்ஸி ரூபஸ் – சேலம்
Mrs. தவமணி தேவி – திருப்பூர்
Mrs. கேற்றி செல்லத்துரை – தாம்பரம்
Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
Mrs. குணசீலி சுந்தரி – கோவை
Sis. லிசிராஜசேகரி – மறைமலைநகர்
S. சூசைமரியன் – சென்னை
Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
Mrs. லாரா ரத்னராஜ் – கோவை
Mrs. ஞானசுந்தரி நாகராஜன் – கீழப்பாவூர்
Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
Mrs. வசந்தி வெஸ்லி – தென்காசி
Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
Mrs. மெர்ஸி வில்சன் – செட்டிப்பரளையம்
Mr. இரா. ஏத்திராசன் – சங்கரி
T. ஹெலன் இந்திராபாய் – மதுரை
A. ஆனிவிக்டோரியா – கொளத்தூர்
R . சரோஜா – தென்கலம்
V. மெர்சி – செட்டிப்பாளையம்
R. விஜிபிரியங்கா – செட்டிப்பாளையம்
M. ராணி – செட்டிப்பாளையம்
A. ஏசுநேகன் – பாண்டிச்சேரி
A. ஜெயசுதா தேவசகாயம் – சென்னை
P. சூரியா பிரியா – திருமங்கலம்
P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
G. பீட்டர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
Mrs. இந்திர மங்களராஜ் – வடவள்ளி
M. புஸ்பராணி – நாமக்கல்
B. ஸ்டெல்லா பவுனம்பாள் – மணச்சநல்லூர்
Mrs. சிந்தனைமலர் ரவீந்தர் – ஆம்பூர்
I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
M. வசந்தா கெனசரேத் – ஆம்பூர்
Mrs. ரேச்சல் ஜீவகாந்தி – சேலம்
Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
R. பால் ஜெயராஜ் – சென்னை
Mrs. ஜோன் தேவநாயகம் – நெல்லை
Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
V. கண்ணம்மாள் – கோவை
S. ஜெயராஜ் – பொள்ளாச்சி
P.S. ருக்மணி – ஈரோடு
P. மேபல் சித்ரா – மணச்சநல்லூர்
Mrs. A. சந்திரா – மதுரை
B. ஸ்டெல்லா – கூத்தூர்
J. ஜோசப் – தூத்துக்குடி
K. மோகன் – குமரப்பாளையம்
Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

# கிருபையுள்ள வார்த்தை குடும்ப வேதாகம முகாம் – ஊட்டி 2013

## பங்குபெற்று செய்தி கொடுத்த தேவஊழியர்கள்...


ஆசிரியர்


சகோ. செங்கோல்ராயன்


சகோ. ஆனந்தராஜ்


சகோ. சாமுவேல் ராஜன்


சகோ. கிங்ஸ்லிராஜா


சகோ. ஆண்டனிராஜா

## சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கான Skit நேரத்தின் போது







## அதிகாலை தியானம் மற்றும் ஜெபநடை (Prayer Walk)







## கூட்டத்தின் ஒருபகுதி மற்றும் பார்வையற்றவரின் அர்ப்பணிப்பு ஜெபம்







Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819

Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/67/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th June 2013

## கிருபையுள்ள வார்த்தை குடும்ப வேதாகம முகாம் – ஊட்டி 2013










## சுவிஷேச கைபிரதிகள் கிடைக்கும்






























***If undelivered please return to :***

**EDITOR - KIRUBAIYULLA VARTHAI**

45 C/1, Church Lane, Coronation Street, Arasaradi
Madurai - 625 016. India E-mail : obey2jesus@gmail.com

Visit www.graciousword.org to read kv magazine online